


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 154 | 4 Pages | 2.1.2026 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 154 | 4 பக்கங்கள் | 2.1.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடங்கண்ட பின்னல் லது**

**விளக்கம்:**
**முற்றுகை செய்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்டபின் அல்லாமல் எச் செயலையும் தொடங்கக்கூடாது, பகைவரை இகழவும் கூடாது.**

## ஏமனில் அரபு அமீரக படைகள் மீது சவுதி அரேபியா தாக்குதல்



சனா, ஜன.2


ஏமனில் 2014ம் ஆண்டு சனா உள்ளிட்ட கணிசமான பகுதிகளை ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். ஐ.நா. அங்கீகாரம் பெற்ற ஆதரவுப்படைகள் தெற்கே சில பகுதிகளை கைப்பற்றி ஆட்சி நடத்தினர்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆதரவுடன் செயல்பட்டு வரும் இந்த படைகள் தனிநாடு கோரி தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இதற்கு அரபு அமீரகம் ஆயுதங்கள் கொடுத்து உதவி வருகின்றன. இதனை எதிர்த்து சவுதி அரேபியா அரசாங்கம் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக போரிட்டு வருகிறார்கள்.

இந்தநிலையில் நேற்று அரபு அமீரகத்தின் கட்டுப்பாட்டில் ஏமனில் உள்ள முகல்லாதுறைமுகத்தை குறிவைத்து சவுதி அரேபியாதாக்குதல் நடத்தியது. ஏவுகணைகளை வீசி நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் ஆயுதங்கள் மற்றும் போர்தளவாடங்கள் பாரத்துடன் அரபு அமீரகத்தில் இருந்து வந்த கப்பல்கள் தகர்க்கப்பட்டன.

மேலும் ஏமன் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாக ஐக்கிய அரபு அமீரகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தானவை எனவும் சவுதி அரேபியா நேரடியாக எச்சரித்துள்ளது.

## தைவானை சுற்றி போர்ப்பயிற்சி நிறைவடைந்ததும்... சீனா வெளியிட்ட புது வருட செய்தி



பீஜிங், ஜன.2

ஆசிய நாடான சீனா, தைவானை தன்னுடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக கூறி, அதனை சுற்றியுள்ள பகுதிகளில் போர்ப்பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது. எனினும், சுயாட்சி பகுதியாக தன்னை அறிவித்து கொண்ட தைவான், இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. தைவானுக்கு, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில், தைவானின் வடக்கு, தென்மேற்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்கு பகுதிகளை சுற்றி சீனாவின் ராணுவம், கடற்படை, விமான படை மற்றும் ராக்கெட் படையினரையும் கொண்டு கூட்டாக போர்ப்பயிற்சியை தொடங்கியது.

அதற்கு ஜஸ்டிஸ் மிஷன் 2025 என பெயரிடப்பட்டது. இதற்கு தைவான் கடும் கண்டனம் தெரிவித்தது. சீனாவின் செயல்கள் மண்டல ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் உள்ளது என கூறியது. உலக நாடுகளும் இதனை உற்றுநோக்கி வருகின்றன.

எனினும், போர்ப்பயிற்சியை சீனா தொடர்ந்து மேற்கொண்டது. இந்த பயிற்சி நேற்று நிறைவடைந்தது. போர்ப்பயிற்சி நிறைவு, புது வருட பிறப்பு ஆகியவற்றை முன்னிட்டு, சீன அதிபர் ஜின்பிங் நேற்று இரவு வெளியிட்ட செய்தியில், நம்முடைய அன்னை பூமியை மீண்டும் ஒன்றிணைக்கும் பணியானது, தடுத்து நிறுத்த முடியாத விசயம் ஆகும் என குறிப்பிட்டார்.

ஒரே நாடு, 2 அமைப்புகள் என்ற கொள்கையை நாம் அமல்படுத்தியே ஆக வேண்டும். ஹாங்காங் மற்றும் மக்காவ் ஆகியவற்றை நம்முடைய நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக ஒன்றிணைக்க ஆதரவு அளிக்க வேண்டும். அவற்றுடன் நீண்ட கால வளம் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றையும் பராமரிக்க வேண்டும் என கூறினார்.

எனினும், தைவான் தேசிய பாதுகாப்பு மந்திரி வெல்லிங்டன் கூ இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளார்.

## வருகிற 4ந் தேதி சீனா செல்லும் பாகிஸ்தான் துணை பிரதமர்

இஸ்லாமாபாத், ஜன.2

பாகிஸ்தான்சீனா வெளியுறவு அமைச்சர்களின் 7வது சுற்று இருதரப்பு பேச்சுவார்த்தை சீன தலைநகர் பெய்ஜிங்கில் வருகிற 4ந் தேதி நடைபெறுகிறது. இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் துணை பிரதமர் இஷாக் தார் சீனாவுக்கு வருகை தருகிறார் சீனாவின் வெளியுறவுத்துறை மந்திரி வாங் யி அழைப்பின் பேரில், இந்த பயணத்தை அவர் மேற்கொள்கிறார்.

இந்த பயணம் இரு நாடுகளுக்கு இடையேயான கூட்டாண்மையை மேம்படுத்தும் வகையில் இருக்கும் என பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த சந்திப்பின்போது, 2026 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டதன் 75 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், இரு வெளியுறவு அமைச்சர்களும் தொடர்ச்சியான முன்முயற்சிகள் மற்றும் நினைவு நடவடிக்கைகளை அறிவிக்க உள்ளனர்.

# ரூ.48.76 கோடியில் விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை, ஜன.2

சென்னை, செங்கல்பட்டு, சேலம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.48.76 கோடி மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணி, சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி, புதிய செயற்கை இழை ஓடுதள பாதை உள்ளிட்ட விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணியினை காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம் கீரப்பாக்கம் கிராமத்தில் 17.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி அமைக்கும் பணி, சேலம் மாவட்ட பல்நோக்கு விளையாட்டு வளாகத்தில் 11.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதள பாதை அமைக்கும் பணி, ராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 12.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை அமைக்கும் பணி என மொத்தம் 48.76 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான



விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதல்அமைச்சர், உலகின் எப்பகுதியில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ள பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை உருவாக்கி செயல்படுத்தி வருகிறார். இந்த அறக்கட்டளை நிதியின் கீழ் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்களுக்கு தேவையான அதிநவீன விளையாட்டு உபகரணங்களை வாங்கி கொள்ளவும், தேசிய, சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவு, தங்குமிடம், பயிற்சி பெறுதல், பயணத்திற்கான செலவுகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்கேற்ற மற்றும் பதக்கங்களை வென்ற வீரர், வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வகையில் தயார் செய்யவதற்காக தடகள வீரர்கள் ர.மானவ், ஜெ.ஆதர்ஷ் ராம், கூடைப்பந்தாட்ட வீரர் பி. பியோடர் ஆதித்தன், குத்துச் சண்டை வீரர் பி.தர்ஷன், தடகள வீரர் யோபின், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வாலிபால் வீராங்கனைகள் ம.ராகஸ்ரீ, பா.சாதனா ஆகிய விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட மொத்தம் 2,80,000/ ரூபாய்க்கான காசோலையை துணை முதல்அமைச்சர் வழங்கினார்.

மேலும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற சைக்கிளிங் வீரர்கள் ச.பிரனேஷ் மற்றும் செள.கவிஷ் ஆகியோருக்கு மொத்தம் 12,48,580/ மதிப்பிலான சர்வதேச தரத்திலான சைக்கிள் மற்றும் உபகரணங்களை வழங்கினார். தொடர்ந்து சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று வரும் நீச்சல் வீரர் உ. அபிஷேக்கிற்கு மலேசியாவிற்கு சென்று பயிற்சி மேற்கொள்வதற்காக ரூ.35,000/ க்கான காசோலையை துணை முதல்அமைச்சர் வழங்கினார்.

இன்றைய தினம் தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியின் கீழ் மொத்தம் 15,63,580/ ரூபாய் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பயிற்சிக்கான உதவித் தொகை காசோலைகளை வழங்கினார்.

பல்வேறு சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வென்ற ஸ்னூக்கர், பில்லியர்ட்ஸ், ரோல் பால் மற்றும் பூப்பந்தாட்ட விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் இன்று துணைமுதல்அமைச்சரை சந்தித்து தாங்கள் வென்ற பதங்கங்கள் மற்றும் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பரங்குன்றம் மலைக்கு அசைவ உணவு கொண்டு செல்வதை அரசு தடுக்க வேண்டும்: விஹெச்பி

திருப்பரங்குன்றம் மலை மீது அசைவ உணவு கொண்டு செல்லவதை தடுக்க வேண்டும் என்று விஸ்வ ஹிந்து பரிஷத் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக விஸ்வ ஹிந்து பரிஷத் மாநில இணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சந்திரசேகரன் மதுரையில் இன்று கூறியதாவது: முருகனின் முதல் படைவீடு என மிக முக்கியத்துவம் வாய்ந்தது திருப்பரங்குன்றம். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் இந்துக்கள் எதிர்பார்ப்பின் படி உயர் நீதிமன்றம் மதுரை அமர்வு உத்தரவிட்டும் கார்த்திகை தீபம் ஏற்ற தமிழக அரசின் இந்து அறநிலைத்துறை மறுத்து விட்டது.



திமுக ஆட்சிக்கு வந்தது முதல் தொடர்ந்து இந்துக்களுக்கு விரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

திருப்பரங்குன்றம் மலை மீது திமுக எம்பி நவாஸ் கனி அசைவ உணவு கொண்டு சென்று சாப்பிட்டதாக சமூக வலைதளங்களில் செய்திகள் வெளியாகி இந்துக்களிடையே கடும் எதிர்ப்பும் கொந்தளிப்பும் ஏற்பட்டது. இந்நிலையில் சில தினங்களுக்கு முன்பு மலையில் உள்ள தர்காவில் சந்தனக்கூடு விழா நடத்த பலத்த போலிஸ் பாதுகாப்புடன் கொடிமரம் எடுத்து செல்லபட்டு அந்த கொடியை திருப்பரங்குன்றம் தல விருட்சமான கல்லத்தி மரத்தில் கட்டப்பட்டதும் அதை அனுமதித்த மாநில அரசின் செயலும் கண்டனத்துகுறியது. இந்நிலையில் தர்காவுக்கு சென்ற இஸ்லாமியர்கள் சிலர் இறைச்சி மற்றும் அசைவ உணவுகளை மலை மீது எடுத்துச் சென்றது காவல்துறை சோதனையில் கண்டறியபட்டு தடுக்கப்பட்டுள்ளது. மலை மீது அசைவ உணவுகள் கொண்டு செல்ல தடை உள்ள நிலையில், இதுவரை சந்தனக்கூடு விழா நடத்தியவர்கள் இந்த ஆண்டு பலியிடும் நிகழ்வான கந்தூரி விழா நடத்துவதாக அறிவித்துள்ளார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் இறைச்சி மற்றும் அசைவ உணவுகளை இஸ்லாமியர்கள் எடுத்துச் செல்ல முயன்றுள்ளனர். மேலும், அவர்கள் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.


எவராயினும் சட்டத்துக்கும் நீதிமன்ற தீர்ப்புக்கும் கட்டுபட்டவர்கள். ஆனால், தொடர்ந்து இஸ்லாமியர்கள் நீதிமன்ற தீர்ப்புகளை மீறும் செயலில் ஈடுபட்டு வருவது வருத்தப்பட வைக்கிறது. எனவே, ஆளும் திமுக அரசு வாக்குவங்கி அரசியலை கைவிட்டு பதட்டத்தை உருவாக்கும் சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மலை மீது அசைவ உணவுகள் சாப்பிடக்கூடாது, ஆடு மாடு கோழி வதை கூடாது என்ற உயர் நீதிமன்ற உத்தரவை செயல்படுத்துவதில் மாநில அரசு உறுதியாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.







கோவை விமல்ஜோதி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த சித்தார்த் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவன் தமிழகம் சார்பாக. மத்திய பிரதேச மாநிலத்தில் கடந்த 25 டிசம்பர் முதல் 30 டிசம்பர் வரையிலான ஸ்கேட்டிங் போட்டியில் (ஸ்கெபி பள்ளி கேம்ஸ் பெட்ரேஷன் இந்தியா) சார்பில் கலந்து கொண்டு 500 மீட்டர் பந்தயத்தில் தமிழகத்திற்கு தங்கம் பதக்கம் வென்று கொடுத்தார்



# பறவை காய்ச்சல் எதிரொலி: கேரளாவில் இருந்து நீலகிரிக்கு கோழிகள் கொண்டு வர தடை

ஊட்டி, ஜன.2

கேரளாவில் ஆலப்புழா, கோட்டயம் உள்ளிட்ட இடங்களில் பறவை காய்ச்சல் பரவல் அதிகமாக இருப்பதால், தமிழகத்தில் பரவாமல் இருக்க கேரளாவையொட்டி உள்ள மாவட்டங்களான நீலகிரி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது.

கூடலூர், பந்தலூர் தாலுகாக்களில் கேரள மாநில எல்லையில் உள்ள சோதனைச்சாவடிகளில் கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குனர் டாக்டர் பாலகிருஷ்ணன் உத்தரவின் பேரில், கால்நடைத் துறையினர் முகாமிட்டு கண்காணித்து வருகின்றனர்.

இதுகுறித்து நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா கூறியதாவது:

பறவை காய்ச்சல் காரணமாக கேரளாவில் இருந்து கோழிகள், முட்டைகள், கோழியின் எச்சம் மற்றும் கோழி தீவனங்கள் வாகனங்களில்



நீலகிரிக்கு கொண்டு வர தற்காலிகமாக தடை விதிக்கப்படுகிறது. கேரள எல்லையோரம் உள்ள 7 சோதனை சாவடிகள், கர்நாடகா மாநில எல்லையோரம் உள்ள ஒரு சோதனை சாவடி ஆகிய 8 இடங்களில் தலா ஒரு கால்நடை உதவி மருத்துவர் தலைமையில், ஒரு கால்நடை ஆய்வாளர், ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளர் கொண்ட குழு காவல்துறை, வனத்துறை, வருவாய் துறையுடன் இணைந்து பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பறவை காய்ச்சல் நோய் கோழி, வாத்து, வான்கோழி மற்றும் வனப்பறவைகளை தாக்கும். மனிதரையும் தாக்கக்கூடியது. நோய் தாக்கிய வெளிநாடுகளில் இருந்து இங்கு வரும் வனப்பறவைகள் மூலம் இந்த நோய் நீலகிரி மாவட்டத்திலும் பரவ வாய்ப்பு உள்ளது. பறவை காய்ச்சல் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பண்ணையாளர்கள் தவறாது கடைபிடிக்க வேண்டும். வனப்பறவைகள் பண்ணைக்குள் நுழையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கோழி, வாத்து, வான்கோழி முதலிய பல்வேறு பறவைகளை ஒரே பண்ணையில் வைத்து வளர்க்க கூடாது. வெளியாட்கள், வெளி வாகனங்கள், விலங்குகள் பண்ணைக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது. இதர பண்ணை உபகரணங்களை பகிர்ந்து கொள்ளக்கூடாது. பண்ணை உபகரணங்களை மாதம் இருமுறை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். கோழி பண்ணையில் அசாதாரண இறப்புகள் இருந்தால், உடனடியாக அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு ரூ.8½ கோடியில் வைகை குடிநீர்: டெண்டர் வெளியீடு

மதுரை, ஜன.2

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையானது திருப்பரங்குன்றம் அருகே தோப்பூர் ஊராட்சி கோ.புதுப்பட்டியில் 220 ஏக்கர் பரப்பளவில் ரூ.2021 கோடியில் கட்டப்பட்டு வருகிறது. முதல் கட்ட கட்டிடங்களுக்கான பணிகளை இந்த மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. 2 லட்சத்து 31 ஆயிரத்து 782 சதுர மீட்டர் பரப்பளவில் 2ம் கட்ட கட்டிட பணிகள் தொடங்க உள்ளன.




இந்த நிலையில் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலம் ஒருங்கிணைந்த குடிநீர்வழங்கல் திட்டத்தின் கீழ் வைகை படுகையில் இருந்து கரடிக்கல் பகுதி வழியாக ராட்சத குழாய்கள் மூலம் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு வைகை குடிநீர் கொண்டு வர திட்டமிடப்பட்டு உள்ளது.

ரூ.8.40 கோடியில் இந்த குடிநீர் திட்ட பணிக்காக டெண்டர் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. 9 மாதத்தில் இந்த பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டம் மூலம் எய்ம்ஸ் வளாகத்திற்கு தினசரி 2.61 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

# திருப்பதி ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் ரெயிலில் கூடுதல் பெட்டிகள் இணைப்பு



திருச்சி, ஜன.2

திருப்பதி ராமேசுவரம் (வண்டி எண்: 16779/16780) எக்ஸ்பிரல் ரெயிலில் தற்காலிகமாக பெட்டிகள் இணைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ராமேசுவரத்தில் இருந்து வருகிற 2ந் தேதி முதல் மார்ச் 29 ந்தேதி (வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமைகளில்) வரையிலும், திருப்பதியில் இருந்து ஜனவரி 3ந்தேதி முதல் மார்ச் 30 ந்தேதி (திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமைகளில்) வரையிலும் கூடுதல் பெட்டிகளுடன் ரெயில் இயக்கப்படும்.

இந்த ரெயிலில் 3 மூன்றடுக்கு குளிர்சாதன பெட்டிகள், 9 இரண்டாம் வகுப்பு பெட்டிகள், 6 பொது இரண்டாம் வகுப்பு பெட்டிகள். மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக 1 பொது இரண்டாம் வகுப்பு பெட்டிகள், 1 லக்கேஜ் பெட்டிகள் ஆகியவை இணைக்கப்பட்டு இருக்கும். இந்த தகவலை திருச்சி கோட்ட மக்கள் தொடர்பு அதிகாரி வினோத் தெரிவித்து உள்ளார்.

# வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை உயர்வு

சென்னை, ஜன.2

பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும், சமையல் கேஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கேஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. இதில் சமையல் கேஸ் சிலிண்டர்களின் விலைகளை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகிறது.



அந்த வகையில் இன்று எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, சென்னையில் வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலை உயர்ந்துள்ளது. கடந்த 2 மாதங்களாக விலை குறைந்த நிலையில் இந்த மாதம் உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.110 உயர்ந்து, ரூ.1,849.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்றமின்றி ரூ.868.50 காசுகள் என்ற நிலையில் நீடிக்கிறது.

# தவெக தலைமையில் மிகப்பெரிய கூட்டணி அமைய உள்ளது: அருண்ராஜ் பேட்டி

நாமக்கல், ஜன.2

நாமக்கல் மாவட்டம் மல்லமுத்திரத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை பரப்பு செயலாளர் அருண்ராஜ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

எஸ்.ஐ.ஆர். படிவங்களில் பெயர்விடுபட்டவர் பெயர்களை சேர்ப்பது குறித்து வீடு, வீடாக சென்று பணிகள் மேற்கொள்வது குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்வதற்காகவும், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகவும் நாமக்கல் வந்துள்ளேன்.

சேலத்தில் நடக்க இருந்த மக்கள் சந்திப்பு கூட்டத்திற்கு பல்வேறு



நிபந்தனைகள் விதிக்கப்பட்டதால் நடைபெற முடியாமல் போய்விட்டது. கட்சியின் தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு குறித்த அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக விரைவில் வெளிவரும்.

கூட்டணி குறித்து முடிவு செய்ய கடந்த மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் குழு அமைக்கப்படும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான குழுவை தலைவர் விரைவில் அறிவிப்பார். த.வெ.க. தலைமையில் மிகப்பெரிய கூட்டணி அமைய உள்ளது. அந்த கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்று தலைவர் விஜய் முதல்அமைச்சராக பதவியேற்பார்.

எங்கள் தலைவரை முதல்அமைச்சராக ஏற்கும் கட்சிகளுடன் தான் கூட்டணி. தி.மு.க., பா.ஜனதாவை தவிர எங்கள் தலைவரை(விஜய்யை) முதல் அமைச்சராக ஏற்று யார்? கூட்டணிக்கு வந்தாலும் அரவணைத்து செல்வோம். இவ்வாறு அவர் கூறினார்.

# நெல்லை, பொதிகை உள்ளிட்ட தென் மாவட்ட ரெயில்கள் புறப்படும் நேரம் இன்று முதல் மாற்றம்

சென்னை, ஜன.2

தென் மாவட்டங்களை சேர்ந்த மக்கள், சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கு செல்லும் முக்கிய போக்குவரத்தாக ரெயில் போக்குவரத்து இருந்து வருகிறது. அதிலும் குறிப்பாக, நெல்லை, பொதிகை, முத்துநகர் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்றே கூறலாம். இந்த ரெயில்கள் சென்னை எழும்பூரில் இருந்து புறப்படும் நேரம் இன்று முதல் மாற்றம் செய்யப்படுவதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு;

எழும்பூரில் இருந்து புறப்படும் நேரம் மாற்றம்

1. சென்னை எழும்பூரில் இருந்து குருவாயூர் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் இன்று முதல் எழும்பூரில் இருந்து காலை 10.20 மணிக்கு பதிலாக 10.40 மணிக்கு புறப்படும்.

2. எழும்பூரில் இருந்து இரவு 8.40 மணிக்கு புறப்படும் நெல்லை எக்ஸ்பிரஸ் இரவு 8.50 மணிக்கு புறப்படும்.

3. எழும்பூரில் இருந்து காலை 7.45 மணிக்கு திருச்சி புறப்படும் சோழன் எக்ஸ்பிரஸ் ரெயில் 8 மணிக்கு புறப்படும்.

4. சென்னை எழும்பூரில் இருந்து இரவு 8.10 மணிக்கு புறப்பட்டும் பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில், இன்று முதல் முன்கூட்டியே 7.35 மணிக்கு புறப்படும்.

5. எழும்பூரில் இருந்து இரவு 7.15 மணிக்கு ராமேசுவரம் புறப்படும் எக்ஸ்பிரஸ் ரெயில் 8.35 மணிக்கு புறப்படும்.

6. எழும்பூரில் இருந்து மதியம் 1.45 மணிக்கு மதுரை செல்லும் வைகை எக்ஸ்பிரஸ் 1.15 மணிக்கு முன்கூட்டியே புறப்பட்டுவிடும்.

7. எழும்பூரில் இருந்து இரவு 7.30 மணிக்கு தூத்துக்குடி செல்லும் முத்துநகர் எக்ஸ்பிரஸ் 7.15 மணிக்கு புறப்படும்.

8. எழும்பூரில் மதியம் 2.45 மணிக்கு புறப்பட்டு நெல்லை செல்லும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் 3.05 மணிக்கு புறப்படும்.



9. எழும்பூரில் இருந்து கொல்லம் செல்லும் அனந்தபுரி எக்ஸ்பிரஸ், எழும்பூரில் இருந்து திருச்செந்தூர் செல்லும் செந்தூர் எக்ஸ்பிரஸ் ஆகிய ரெயில்களின் நேரம் மாற்றப்படவில்லை. மறுமார்க்கமாக.... 1. நெல்லையில் இருந்து எழும்பூர் வரும் நெல்லை எக்ஸ்பிரஸ் இரவு 8.40 மணிக்கு பதிலாக 8.50க்கு புறப்படும்.

2. சோழன் எக்ஸ்பிரஸ் ரெயில்திருச்சியில்இருந்து காலை 11 மணிக்கு பதிலாக மதியம் 12.10 மணிக்கு புறப்படும்.

3. செங்கோட்டையில் இருந்து மாலை 6.45 மணிக்கு புறப்படும் பொதிகை எக்ஸ்பிரஸ் 6.50 மணிக்கும் புறப்படும்.

4. ராமேசுவரத்தில் இருந்து மாலை 5.50 மணிக்கு புறப்படும் எக்ஸ்பிரஸ் ரெயில் 6 மணிக்கு புறப்படும். 5. தூத்துக்குடியில் இருந்து எழும்பூர் வரும் முத்துநகர் எக்ஸ்பிரஸ் இரவு 8.40 மணிக்கு பதிலாக 9.05 மணிக்கு புறப்படும்.

6. இதேபோல, குருவாயூர், வைகை, நெல்லை வந்தேபாரத் ஆகிய ரெயில்களில் மறுமார்க்கமாக புறப்படும் நேரத்தில் மாற்றமில்லை.

அதேநேரத்தில் மின்சார ரெயில் நேர மாற்ற அட்டவணையும் விரைவில் வெளியாக இருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# திருத்தணியில் தாக்கப்பட்ட வடமாநில வாலிபர் இறந்துவிட்டாரா? தமிழக அரசு விளக்கம்

சென்னை, ஜன.2

திருத்தணி ரெயில் நிலையம் அருகே ஒடிசாவை சேர்ந்த வாலிபர் மீது கஞ்சா போதையில் 4 பேர் கொடூரமாக தாக்கிய காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவி, காண்போரை அதிர்ச்சியடைய வைத்தது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட 4 சிறுவர்களையும் போலீசார் பிடித்தனர். ஒருவர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளார். மீதம் உள்ள 3 சிறுவர்கள் கூர்நோக்கு இல்லத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே தாக்குதலுக்கு உள்ளான ஒடிசா வாலிபர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

இதற்கிடையே அந்த வாலிபர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக சமூகவலைத்தளங்களில் புகைப்பட தகவல் பரவி வருகிறது. இதனை பலரும் பகிர்ந்து வருகின்றனர்.



இதுகுறித்து தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டு உள்ளதாவது:

27.12.2025 அன்று திருத்தணி ரெயில்வே குடியிருப்பு அருகே சில நபர்களால் தாக்கப்பட்ட ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்தவர் உயிரிழந்ததாக பரவும் தகவல் தவறானது. பாதிக்கப்பட்டவர் சிகிச்சை பெற்ற பிறகு ஆஸ்பத்திரியில் இருந்து ‘டிஸ்சார்ஜ்’ ஆகி சென்றுள்ளார். தவறான செய்தியை பரப்புவது சட்டப்படி குற்றமாகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# நான்கரை ஆண்டுகளாக எங்கே சென்றீர்கள்..? செல்வப்பெருந்தகை காரை முற்றுகையிட்ட கிராம மக்கள்

ஸ்ரீபெரும்புதூர், ஜன.2

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட கோட்டூர் கிராமத்திற்கு, ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவருமான செல்வப்பெருந்தகை அப்பகுதி மக்களை சந்திப்பதற்காக நேற்று முன் தினம் இரவு சென்றுள்ளார். அப்போது அங்கு இருந்த பெண்கள் உள்பட திரளான பொதுமக்கள், செல்வப்பெருந்தகையின் காரை முற்றுகையிட்டு, அவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும் அவர்கள், “எங்கள் பகுதியில் சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் சரிவரசெய்துதரவில்லை.



கடந்த நான்கரை ஆண்டுகளாக எங்களை நீங்கள் சந்திக்க வரவில்லை. அப்போது எங்கே சென்றீர்கள். எங்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரவில்லை. நாங்கள் மீண்டும் உங்களை எப்படி நம்புவது?” என சரமாரியாக கேள்வி எழுப்பினர். அவர்களை செல்வபெருந்தகை சமாதானப்படுத்தி பேச முயன்றார். ஆனால் பொதுமக்கள் ஆவேசத்துடன் அடுக்கான கேள்விக்கணைகளால் அவரை பேசவிடாமல் திணறடித்தனர்.

இதனால் சூழ்நிலையை அறிந்த செல்வப்பெருந்தகை வேக வேகமாக காரில் ஏறி அங்கிருந்து செல்ல முற்பட்டார். ஆனால் பொதுமக்கள் அவரது காரை செல்லவிடாமல் தடுத்து முற்றுகையிட்டு அவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உடனே அங்கிருந்த கட்சி நிர்வாகிகள், காரை வழிமறித்து வாக்குவாதத்தில் ஈடுபட்ட மக்களை சமாதானம் செய்து விலகிப்போக செய்து, செல்வபெருந்தகையின் கார் செல்வதற்கு வழி ஏற்படுத்தி கொடுத்தனர். அதன்பிறகு செல்வப்பெருந்தகை அங்கிருந்து காரில் வேகமாக புறப்பட்டு சென்றார். சட்டமன்ற உறுப்பினரிடம், பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சென்னையில் போதை மாத்திரை விற்றதாக பெண் போலீசின் கணவர், டாக்டர் கைது

சென்னை, ஜன.2

சென்னை சைதாப்பேட்டை ரெயில் நிலையம் அருகே போதை மாத்திரை மற்றும் கஞ்சா விற்பனையில் மர்ம நபர்கள் ஈடுபடுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து சைதாப்பேட்டை தனிப்படை போலீசார் நேற்று முன்தினம் இரவு சைதாப்பேட்டை ரெயில் நிலையம் அருகே மாறுவேடத்தில் கண்காணித்தனர். அப்போது, அங்கு மோட்டார் சைக்கிளில் 2 பேர் வந்து இறங்கினார்கள். அவர்களை பிடித்து விசாரித்தபோது அவர்களிடம் கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள்




உள்ளிட்ட போதை பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டது. அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் பிரபாகரன் (வயது 27) என்பவர் சைதாப்பேட்டையை சேர்ந்தவர். இவர் சென்னை ஆயுதப்படை பிரிவில் பெண் போலீசாக பணியாற்றுபவரின் கணவர் ஆவார். இன்னொருவர் ஹரிசுதன் (23), சேலையூரை சேர்ந்தவர். இவர், டாக்டராக உள்ளார். இவர்கள் இருவரும் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று போலீசார் தொிவித்தனர்.

முன்னதாக சென்னை மற்றும் புறநகர் பகுதியில் புத்தாண்டை முன்னிட்டு மெத்தபெட்டமைன் என்ற போதைப்பொருள் விற்கப்படுவதாக வந்த தகவலின்பேரில் சென்னை போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுபிரிவு தனிப்படை போலீசாரும், பரங்கிமலை போலீசாரும் இணைந்து தீவிரமாக கண்காணித்து வந்தனர்.

# அனைவருக்கும் அன்பான புத்தாண்டு வாழ்த்துகள் கவர்னர் ஆர்.என்.ரவி



சென்னை, ஜன.2

2026ம் ஆண்டு ஆங்கிலப் புத்தாண்டு இந்தியாவில் பிறக்க இன்னும் சில மணிநேரங்களே உள்ளன. புத்தாண்டை வரவேற்க மக்கள் தயாராகி வருகின்றனர். ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆங்கில புத்தாண்டை பட்டாசுகள் வெடித்தும், வாணவேடிக்கை வைத்தும் 2026ம் ஆண்டை உற்சாகமாக வரவேற்றனர். ஒருவொருக்கொரும் வாழ்த்துகளை பறிமாறிகொண்டனர். இந்தநிலையில் ஆங்கில புத்தாண்டையொட்டி பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், சினிமா பிரபலங்கள், ஆன்மிக தலைவர்கள் என அனைத்து தரப்பு மக்களும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்தநிலையில், அனைவருக்கும் அன்பான புத்தாண்டு வாழ்த்துகள் என கவர்னர் ஆர்.என். ரவி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2026 ஆம் ஆண்டின் விடியல் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை மற்றும் வலுப்படுத்தப்பட்ட உறுதியை அறிமுகப்படுத்தட்டும். நம் வாழ்வில் மகிழ்ச்சி, நல்ல ஆரோக்கியம் மற்றும் செழிப்பு ஆகியவற்றை நிரப்பட்டும். அனைவருக்கும் அன்பான புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தாண்டை ஒட்டி டெலிவரி ஊழியர்களுக்கு தற்காலிக ஊக்கத் தொகை உயர்வு




சென்னை, ஜன.2

நவீன காலத்திற்கு ஏற்க மக்களும் மாறி வருகிறார்கள். அந்த வகையில் இருக்கிற இடத்தில் இருந்து எந்த பொருட்களையும் ஆர்டர் செய்ய முடியும். கருவேப்பிலை முதல் ஹெலிகாப்டர் வரை வாங்க முடியும். எனவே கைக்குள் உலகம் வந்து விட்டது. இந்த சூழலில் ஆன்லைன் டெலிவரி தொழிலில் பல லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் தமிழகத்தில் உணவு பொருட்களை டெலிவரி செய்ய ஜொமோட்டோ, சுவிக்கி உள்ளிட்ட பல நிறுவனங்கள் உள்ளது. இந்த ஊழியர்கள் மழை, வெயில் என எதையும் பொருட்படுத்தாலம் பொருட்களை டெலிவரி செய்து வருகிறார்கள்.

இந்தநிலையில், புத்தாண்டை ஒட்டி ஸ்விக்கி, சொமாட்டோ போன்ற ஜிஐஜி நிறுவனங்கள் அதன் டெலிவரி ஊழியர்களுக்கு தற்காலிக ஊக்கத் தொகை உயர்வை அறிவித்துள்ளன. இன்று மாலை 6 நள்ளிரவு 12 மணி வரையான பீக் ஹவர் காலத்தில், டெலிவரி செய்யப்படும் ஆர்டர்களைப் பொறுத்து ஒரு ஆர்டருக்கு ரூ.150 வரை ஊக்கத்தொகை கிடைக்கும் என்றும் 6 மணி நேரத்தில் ரூ. 3,000 வரை சம்பாதிக்கலாம் எனவும் நிறுவனங்கள் கூறியுள்ளன.

# பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியீடு



சென்னை, ஜன.2

தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையை பொது மக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் ஆண்டுதோறும் தமிழக அரசு சார்பில் ரேஷன் கடைகள் மூலம் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரொக்கப் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின்னர் 2022ம் ஆண்டு பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை உள்பட 20 பொருட்கள் அடங்கிய தொகுப்பும், கரும்பும் வழங்கப்பட்டது. கடந்த 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை, கரும்புடன் தலா ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணமும் வழங்கப்பட்டது.

ஆனால், கடந்த பொங்கல் பண்டிகைக்கு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு மட்டும் வழங்கப்பட்டு ரொக்கப் பரிசு வழங்கப்படாத நிலையில், அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளதால் பச்சரிசி, சர்க்கரை மற்றும் கரும்புடன் சேர்த்து கடந்த ஆண்டுகளில் ஏற்கனவே வழங்கப்பட்ட ரொக்கப்பணத்தைவிட கூடுதலாக ரொக்கப் பணம் பரிசாக வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே எழுந்துள்ளது.

இந்தநிலையில், 2026 பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு கொள்முதல் செய்வதற்கு இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

# செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தொடர்பான 3 நாள் பயிற்சி தமிழக அரசு தகவல்




சென்னை, ஜன.2

செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தொடர்பான 3 நாள் பயிற்சி குறித்த அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழ்நாடு (EDII TN), சென்னை, "செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தலின் (Digital Marketing) அடிப்படைகள்" என்ற தலைப்பில் 3 நாள் முழுநேர பயிற்சி நிகழ்ச்சியை 07.01.2026 முதல் 09.01.2026 வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை EDIITN கட்டிட வளாகம், சென்னை – 600 032 யில் நடத்துகிறது.

இந்த பயிற்சி நிகழ்ச்சியின் நோக்கம், செயற்கை நுண்ணறிவின் அடிப்படைகள் மற்றும் அதன் நடைமுறைப் பயன்பாடுகளை அறிமுகப்படுத்தி, டிஜிட்டல் சந்தைப்படுத்தலில் (Digital Marketing) AI ஏற்படுத்தும் மாற்றங்களை விளக்குவதாகும். கருத்து விளக்கங்கள், நடைமுறைப் பயிற்சிகள் மற்றும் செயல் விளக்கங்களின் மூலம் பங்கேற்பாளர்கள் அனுபவமிக்க கற்றலைப் பெறுவர்.

பயிற்சியின் முக்கிய அம்சங்கள்:

☐ செயற்கை நுண்ணறிவு (AI): செயற்கை நுண்ணறிவு மற்றும் அதன் அன்றாட வாழ்க்கைப் பயன்பாடுகள்.

☐ முக்கியக் கருத்துக்கள்: இயந்திரக் கற்றல் (Machine Learning), டீப் லேர்னிங் (Deep Learning), லார்ஜ் லாங்க்வேஜ் மாதிரிகள் (Large Language Models – LLMs) – உதாரணம்: ChatGPT.

☐ சந்தைப்படுத்தலின் அடிப்படைகள்: வாடிக்கையாளர் நடத்தை, டிஜிட்டல் சந்தைப்படுத்தல் உத்திகள் மற்றும் பிரச்சார அடிப்படைகள்.

☐ டிஜிட்டல் சந்தைப்படுத்தல் சேனல்கள்: தேடல் பொறிகள், சமூக ஊடகங்கள், மின்னஞ்சல் சந்தைப்படுத்தல், இணையதளங்கள் மற்றும் ஆன்லைன் விளம்பரம்.

☐ SEO மற்றும் ஆராய்ச்சி கருவிகள்: SEMrush, Surfer SEO போன்ற கருவிகளின் அறிமுகம்.

☐ செயற்கை நுண்ணறிவு கருவிகளின் நடைமுறைப் பயன்பாடு:

☐ Jasper – சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் வலைப்பதிவுகளுக்கான AI உள்ளடக்க உருவாக்கம்.

☐ Canva AI – கிராஃபிக் வடிவமைப்புக்கான செயற்கை நுண்ணறிவு கருவி.

☐ SEMrush – பார்வையாளர் மற்றும் முக்கிய வார்த்தை ஆராய்ச்சி.

☐ Sprinklr – சமூக ஊடகப் பகுப்பாய்வு மற்றும் ஈடுபாட்டு கண்காணிப்பு.

☐ குழு அடிப்படையிலான செயல்பாடுகள்: AI உத்திகளைப் பயன்படுத்தி பிரச்சார முகவர் (Campaign Agent) உருவாக்கம்.

முக்கியக் கற்றல் பலன்கள்:

☐ செயற்கை நுண்ணறிவு (AI) வாடிக்கையாளர்களை துல்லியமாக இலக்காகக் கொள்ளும் திறன் மற்றும் தன்னியக்க உள்ளடக்க உருவாக்கம் மூலம் சந்தைப்படுத்தலில் புதுமையை உருவாக்குகிறது.

☐ பல்வேறு AI நுட்பங்கள் (Techniques) மற்றும் மாதிரிகள் (Models) குறித்து அறிந்து அவற்றை திறம்படப் பயன்படுத்தும் திறன் பெறுவர்.

☐ டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பல சேனல்களை உள்ளடக்கியது; ஒவ்வொன்றிற்கும் தனித்துவமான உத்திகள் மற்றும் கருவிகள் அவசியம்.

☐ SEMrush மற்றும் Surfer SEO போன்ற கருவிகள் இணையத்தள தெரிவு நிலை மற்றும் பார்வையாளர் நுண்ணறிவை மேம்படுத்த முக்கிய பங்காற்றுகின்றன.

☐ Jasper மற்றும் Canva AI போன்ற கருவிகள் படைப்பாற்றலை மேம்படுத்தி பிரச்சாரத்தின் தாக்கத்தையும் உயர்த்துகின்றன.

☐ Sprinklr போன்ற தளங்கள் மூலம் கூட்டுப்பணி மற்றும் தரவு சார்ந்த முடிவெடுப்புகள் சிறந்த விளைவுகளைத் தருகின்றன.

தகுதியுடையவர்கள்:

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் (ஆண்/பெண் / திருநங்கைகள் / திருநம்பிகள்/ தொழில்முனைவோர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். குறைந்தபட்ச கணினி அறிவு வேண்டும். 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். பயிற்சியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்திலான தங்குமிடம் கிடைக்கும். தேவைப்படுவோர் முன் பதிவு செய்துகொள்ளலாம்

மேலும், இப்பயிற்சியின் கூடுதல் விவரங்களைப் பெறவும் மற்றும் முன்பதிவு செய்திடவும் www.editn.tn என்ற இணையத்தளத்தில் பதிவு செய்து கொள்ளவும். கைபேசி 9360221280 / 9840114680 என்ற எண்களில் தொடர்பு கொள்ளவும். (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருத்தணி ரெயில் நிலையத்தில் புடவை வியாபாரி மீது இளைஞர்கள் தாக்குதல் அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஜன.2

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

சூரஜ் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதலின் காயங்கள் இன்னும் ஆறாத நிலையிலேயே, நேற்று திருத்தணியில் மேலும் ஒரு வன்முறைச் சம்பவம் அரங்கேறியுள்ளது. ஜமால் என்ற உள்ளூர் வியாபாரி, எந்தவிதத் தூண்டுதலும் காரணமும் இன்றி ஒரு கும்பலால் தாக்கப்பட்டுள்ளார்.

இது இனி தனிப்பட்ட சம்பவமல்ல. கடந்த சில ஆண்டுகளாக தமிழகமெங்கும் இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவது, ஒரு அச்சமூட்டும் போக்காக மாறியுள்ளது. சட்டவிரோதச் செயல்கள் சாதாரணமாகி வருகின்றன. குற்றவாளிகள் தைரியமடைகிறார்கள்; சாதாரண மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். திமுக ஆட்சிக் காலத்தில் பொதுமக்களின் பாதுகாப்பு முற்றிலும் சீர்குலைந்துள்ளது.

சட்டம்ஒழுங்கை பராமரிப்பதில் தங்களின் முழுமையான தோல்வியை திமுக எப்போது ஏற்றுக்கொள்ளப் போகிறது? இன்னும் எத்தனை சூரஜ்களும் ஜமால்களும் பாதிக்கப்பட வேண்டும்?

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2025ல் அரசு பணிக்கு 20,471 பேர் தேர்வு டி.என்.பி.எஸ்.சி. பெருமிதம்




சென்னை, ஜன.2

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் (டி.என்.பி.எஸ்.சி.) செயலாளர் கோபால சுந்தரராஜ் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

டி.என்.பி.எஸ்.சி. மூலம் தேர்வுப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டு 2025ம் ஆண்டு 20 ஆயிரத்து 471 தேர்வர்கள் பல்வேறு பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2024ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 9 ஆயிரத்து 770 தேர்வர்கள் கூடுதலாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பை அதிகரிக்க 11 ஆயிரத்து 809 காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அரசுப்பணிகளின் நேரடி நியமனங்களில் சமூக நீதியை வலுப்படுத்த 2025ம் ஆண்டு 1,007 பட்டியலின மற்றும் பழங்குடியினருக்கான குறைவு காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும் பட்டியலின மற்றும் பழங்குடியினருக்கான 761 குறைவு காலிப் பணியிடங்களை நிரப்ப அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு தேர்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தேர்வு நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் விதமாக 2025ம் ஆண்டு கலந்தாய்வின் போது காலிப்பணியிடங்களின் விவரங்களை தேர்வர்கள் இணையவழியில் அறிந்து கொள்ளும் வகையில் தேர்வாணையத்தின்' யூடியூப்' சேனல் மூலமாக நேரலையாக ஒளிபரப்பும் நடைமுறையும். கணினிவழி மூலம் நடைபெறும் தேர்வுகளில் தேர்வர்கள் தங்களது விடைத்தாளை உத்தேச விடைகள் வெளியிடும்போது தேர்வாணைய இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்யும் வசதியும் ஏற்படுத்தப்பட்டது.

தேர்வு நடைமுறைகளில் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் விதமாக 2025ம் ஆண்டு அரசுத்துறைகளிடமிருந்து காலிப்பணியிட விவரங்களை இணையவழியில் பெறும் நடைமுறையும், தேர்வர்கள் தேர்வுக்கட்டணங்களை யு.பி.ஐ. மூலம் செலுத்தும் வசதியும், தேர்வர்கள் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் வசதியும் இணையவழியில் மனுக்களை சமர்ப்பிக்கும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேர்வர்கள் தங்களை தேர்வுக்கு ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காக 2026ம் ஆண்டுக்கான ஆண்டுத்திட்டம் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வாணைய வரலாற்றில் முதன்முறையாக தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு தொகுதி 1, 2, 2ஏ, மற்றும் 4 ஆகிய பணிகள் மற்றும் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு, நேர்முகத் தேர்வு பதவிகள், நேர்முகத்தேர்வு அல்லாத பதவிகள், பட்டயப்படிப்பு/ தொழிற்பயிற்சி நிலை ஆகியவைகளுக்கான அறிவிப்புகள் தேர்வாணையத்தால் வெளியிடப்பட உள்ளன.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பெரியார் காண விரும்பிய சமத்துவ உலகமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம் கி.வீரமணி



சென்னை, ஜன.2

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:

கரூர்மாவட்டம்தோகைமலை அருகே சின்னரெட்டியப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் காலை உணவு திட்ட சமையல் பணியில் ஈடுபட்டிருந்த 35 வயது பெண், ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்ற காரணத்தால் பணியிலிருந்து நீக்கப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தகவல் அறிந்து நாம் கடும் எதிர்ப்பு தெரிவித்தோம். தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரை முன்னிலைப்படுத்தி பல்வேறு செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்திவரும் தமிழக அரசு, கரூரில் நிகழ்ந்துள்ள இந்த வன்கொடுமை பிரச்சினையிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நம்புகிறோம். உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம்.

இதேபோல மதுரை மாவட்டம் திருப்பாலையில் உள்ள நல்லமணி அரசு உதவி பெறும் பள்ளிக்கு அருகில் ஆர்.எஸ்.எஸ். கிளைநடத்தப்பட்டதை அறிந்து, அதற்கு எதிர்ப்பு எழுந்து, காவல் துறை அங்கே சென்று மாணவர்களிடம் மதவெறி ஊட்டப்படுவதைத் தடுத்துள்ளது. இதுகுறித்து, திராவிடர் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் சார்பிலும் மாவட்ட கலெக்டரிடமும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சாதிவெறிக்கும், மதவெறிக்கும் இடமில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். புத்துலகின் மாதிரி வடிவமாக, பெரியார் காண விரும்பிய சமத்துவ உலகமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வந்தே பாரத் ரெயில்: நாளை முதல் சோதனை அடிப்படையில் விருத்தாசலம் ரெயில் நிலையத்தில் நிறுத்தம்



புதுடெல்லி, ஜன.2

நாடு முழுவதும் முக்கிய வழித்தடங்களில் வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்படுகின்றன. தமிழகத்திலும் வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்படுகின்றன. ஏ.சி. வசதி, பயோ டாய்லெட், தானியங்கி கதவுகள் உள்ளிட்ட பாதுகாப்பு அம்சங்களுடன், அதிநவீன சொகுசு வசதிகள் கொண்ட இந்த ரெயில்களுக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்நிலையில் சென்னை எழும்பூர் திருநெல்வேலி வந்தே பாரத் ரெயிலுக்கு நாளை முதல் சோதனை அடிப்படையில் விருத்தாசலம் ரெயில் நிலையத்தில் 2 நிமிடம் நிறுத்தம் அளிக்கப்படுவதாக தெற்கு ரெயில்வே அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

# பெரியார் காண விரும்பிய சமத்துவ உலகமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம் கி.வீரமணி



சென்னை, ஜன.2

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:

கரூர்மாவட்டம்தோகைமலை அருகே சின்னரெட்டியப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் காலை உணவு திட்ட சமையல் பணியில் ஈடுபட்டிருந்த 35 வயது பெண், ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்ற காரணத்தால் பணியிலிருந்து நீக்க ப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தகவல் அறிந்துநாம்கடும்எதிர்ப்பு தெரிவித்தோம். தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரை முன்னிலைப்ப டுத்தி பல்வேறு செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்திவரும் தமிழக அரசு, கரூரில் நிகழ்ந்துள்ள இந்த வன்கொடுமை பிரச்சினையிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நம்புகிறோம். உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம். இதேபோல மதுரை மாவட்டம் திருப்பாலை யில் உள்ள நல்லமணி அரசு உதவி பெறும் பள்ளிக்கு அருகில் ஆர்.எஸ்.எஸ். கிளை நடத்தப்பட்டதை அறிந்து, அதற்கு எதிர்ப்பு எழுந்து, காவல் துறை அங்கே சென்று மாணவர்களிடம் மத வெறி ஊட்டப்படுவதைத் தடுத்துள்ளது. இதுகுறித்து, திராவிடர் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் சார்பிலும் மாவட்ட கலெக்டரிடமும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சாதிவெறிக்கும், மதவெறிக்கும் இடமில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். புத்துலகின் மாதிரி வடிவமாக, பெரியார் காண விரும்பிய சமத்துவ உலகமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி. ஆக மகேஸ்வர் தயாள் பொறுப்பேற்பு



சென்னை, ஜன.2

2026ம் ஆண்டுக்கான ஐபிஎஸ் அதிகாரிகளுக்கான பதவி உயர்வு மற்றும் பணியிட மாறுதல்களுக்கான பட்டியலை தமிழக அரசு வெளியிட்டது. தமிழகம் முழுவதும் ஐபிஎஸ் அதிகாரிகள் 70 பேர் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். இதில் 3 ஏடிஜிபிக்கள், 7 ஐஜிக்கள், 3 டிஐஜிக்கள், 15 எஸ்பிக்கள், 2 கூடுதல் எஸ்பிக்கள் என மொத்தம் 30 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

சட்டம் ஒழுங்கு ஏடிஜிபியாக இருந்த டேவிட்சன் தேவாசீர்வாதத்துக்கு ஆயுதப்படை டிஜிபி ஆக பதவி உயர்வு வழங்கப்பட்டு உள்ளது. புதிய சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி ஆக மகேஸ்வர் தயாள் நியமனம் செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில், சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி. ஆக இருந்த டேவிட்சன் தேவாசீர்வாதம், டி.ஜி.பி. ஆக பதவி உயர்வு பெற்று ஆயுதப் படைக்கு பணி மாறுதல் பெற்ற நிலையில், ஏ.டி.ஜி.பி. மகேஸ்வர் தயாள் இன்று சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி. ஆக பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு சக அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
2.1.2026

# வாக்காளர் பட்டியலில் மீண்டும் பெயர் சேர்க்க 7.35 லட்சம் பேர் விண்ணப்பம்

சென்னை, ஜன.2

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம் உள்பட 10மாநிலங்கள், புதுச்சேரி, லட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களில் கடந்த நவம்பர் மாதம் 4ந் தேதி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்.ஐ.ஆர்.) தொடங்கின. இந்தப் பணிகள் இம்மாதம் (டிசம்பர்) 4ந் தேதி முடிவடைய இருந்த நிலையில், பல்வேறு நடைமுறை சிக்கல்கள் இருந்ததால், படிவங்களை பூர்த்தி செய்து வழங்க 2 முறை கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்தப் பணிகள் முடிவடைந்த நிலையில், கடந்த 19ந் தேதி தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியலை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

அதன்படி, தமிழகத்தில் மொத்தம் உள்ள 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 587 வாக்காளர்களில் 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டன. தற்போதைய நிலையில், வரைவு வாக்காளர் பட்டியலில் 5 கோடியே 43 லட்சத்து 76 ஆயிரத்து 755 பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளது. மொத்த வாக்காளர்களில் 15.18 சதவீதம் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தற்போது 2 கோடியே 77 லட்சம் ஆண் வாக்காளர்களும், 2 கோடியே 66 லட்சம் பெண் வாக்காளர்களும் உள்ளனர். இறந்த வாக்காளர்கள் 26 லட்சத்து 32 ஆயிரத்து 672 பேர் ஆவார்கள். முகவரி இல்லாதவர்கள் 66 லட்சத்து 44 ஆயிரத்து 881 பேரும், இரட்டைப் பதிவு செய்தோர் 3 லட்சத்து 39 ஆயிரத்து 278 பேரும் ஆவார்கள்.

இதில், இறந்தவர்கள் பெயரிலும், இரட்டைப் பதிவு கொண்டோரும் மீண்டும் விண்ணப்பிக்க முடியாது. அதே நேரத்தில், முகவரி மாற்றத்தால் நீக்கப்பட்டவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம். அவர்களின் பெயர்களை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வாய்ப்பு அளிக்கும் வகையில் ஜனவரி 18ந் தேதி வரை விண்ணப்பிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதுபோன்று விண்ணப்பிப்பவர்கள் படிவம் 6ஐ பூர்த்தி செய்து உறுமொழி படிவம் ஒன்றையும் கொடுக்க வேண்டும். நேற்று இரவு 8 மணி நிலவரப்படி, வாக்காளர் பட்டியலில் மீண்டும் பெயர் சேர்க்க 7 லட்சத்து 35 ஆயிரத்து 191 பேர் விண்ணப்பித்துள்ளனர். பெயர் நீக்க 9 ஆயிரத்து 505 பேர் விண்ணப்பித்துள்ளனர். இந்தப் பணிகள் அனைத்தும் ஜனவரி 18ந் தேதி முடிவடைந்த பிறகு, அனைத்தும் சரிபார்க்கப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி 17ந் தேதி வெளியிடப்படுகிறது. அதில் இடம்பெறும் வாக்காளர்களே சட்டசபை தேர்தலில் வாக்களிக்க முடியும்.

# பயணிகள் கவனத்திற்கு... வைகை எக்ஸ்பிரஸ் புறப்படும் நேரம் நாளை முதல் மாற்றம்




சென்னை ஜன.2

சென்னை எழும்பூர் , மதுரை இடையே இயக்கப்படும் வைகை எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்படும் நேரம் நாளை முதல் மாற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சென்னை எழும்பூர் மதுரை இடையே இயக்கப்படும் வைகை எக்ஸ்பிரஸ் ரெயிலின் புறப்படும் நேரம் நாளை (வியாழக்கிழமை) முதல் மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை சென்னை எழும்பூரில் இருந்து மதியம் 1.45 மணிக்கு புறப்பட்டு வந்த வைகை எக்ஸ்பிரஸ் இனி அரை மணி நேரம் முன்னதாக 1.15 மணிக்கே புறப்படும். இரவு 8.35 மணிக்கு மதுரையை சென்றடையும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் உட்கட்சி விவகாரத்தில் தலையிட வேண்டாம் கூட்டணி கட்சிகளுக்கு மாணிக்கம் தாகூர் எம்.பி. எச்சரிக்கை

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இதைத் தொடர்ந்து காங்கிரஸ் நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி, விஜய்யை நேரில் சந்தித்து பேசினார். இது தமிழக அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. சமீபத்தில் உத்தரப்பிரதேசத்தை விட அதிக கடன் வாங்கும் மாநிலமாக தமிழ்நாடு இருப்பதாக பிரவீன் சக்ரவர்த்தி கருத்து தெரிவித்திருந்தார். அவரது கருத்துக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி, மதிமுக உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சிகள் கண்டனம் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் உட்கட்சி விவகாரத்தில் கூட்டணி கட்சிகள் தலையிட வேண்டாம் என்று விசிக, மதிமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் எச்சரிக்கை விடுத்துள்ளார். திருமாவளவன், வைகோ, சண்முகம், வீரபாண்டியன் ஆகிய தலைவர்களை குறிப்பிட்டு மாணிக்கம் தாகூர் பதிவிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் தெரிவித்திருப்பதாவது:

விசிக, மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் காங்கிரஸ் கட்சியின் ஒரு நிர்வாகி மீது நடவடிக்கை எடுக்க இந்திய எதிர்கட்சி தலைவரிடம் கோரிய செய்தியை தனியார் நாளிதழில் படித்தேன். இது ஒரு அடிப்படை கேள்வியை எழுப்புகிறது:

காங்கிரஸ் தனது உள்கட்சி விஷயங்களை எப்படி நடத்த வேண்டும் என்று கூட்டணி கட்சிகள் உத்தரவிடத் தொடங்கியது எப்போது? தங்களது உள்கட்சி விஷயங்களில் இது போன்ற பொது கருத்துகளை இக்கட்சிகள் ஏற்றுக்கொள்வார்களா? தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை ரவிக்குமார் எம்.பி., துரை வைகோ, சண்முகம், வீரபாண்டியன் ஆகியோரிடம் “உங்கள் கட்சி உறுப்பினர்களை இப்படிச் சமாளியுங்கள்” என்று சொன்னால், அவர்கள் அதை சகிப்பார்களா?

கூட்டணிகள் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் உருவாகின்றன பொது அழுத்த அரசியலால் அல்ல. ஏதேனும் கருத்து வேறுபாடுகள் இருந்தால், அவை ஊடக அறிக்கைகள் மூலம் அல்ல; கூட்டணி மேடைகளுக்குள் பேசப்பட வேண்டும்.

ஒரு கூட்டணி கட்சியின் உள்கட்சி செயல்பாடுகளை பொது வெளியில் விமர்சிப்பது ஆபத்தான முன்னுதாரணத்தை உருவாக்குகிறது; இது பாஜக ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளுக்கு எதிரான கூட்டு வலிமையையே பலவீனப்படுத்தும். இது கட்சி செயல் வீரர்கள் தன்மான உணர்வை தூண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைமைகள் தங்களது மாநில செயலாளர்களுக்கு குறைந்தபட்ச அரசியல் மரியாதையையும், கூட்டணி ஒழுக்கத்தையும் பேண அறிவுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அண்ணன் வைகோ, திருமாவளவன் அண்ணனும், கூட்டணி கட்சிகளுடன் நடக்கும் விஷயங்களில் “லட்சுமண ரேகை”யை மதிக்குமாறு தங்களது எம்.பிக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஒற்றுமை என்பதன் அர்த்தம் மௌனம் அல்ல ஆனால் அது கட்டுப்பாட்டையும் பொறுப்பையும் குறிக்கிறது. கூட்டணி தர்மம் அனைவருக்கும் சமமாகவே பொருந்த வேண்டுமே ஒழிய அது காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் அல்ல. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் (2.1.2026)

**மேஷம்:** புத்தாண்டு உங்களுக்கு உற்சாகத்துடன் தொடங்கும். நிலுவையில் இருந்த வேலைகள் விரைந்து முடியும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய முயற்சிகள் கைகூடும். பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும்.

**ரிஷபம்:** நிதானமாகச் செயல்பட வேண்டிய நாள். தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். பிற்பகலுக்குப் பின் சுபச் செய்திகள் வந்து சேரும்.

**மிதுனம்:** தொழில் ரீதியாகப் பெரிய மாற்றங்கள் ஏற்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு அல்லது இடமாற்றம் கிடைக்க வாய்ப்புள்ளது. கணவன்மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

**கடகம்:** வெற்றிகள் தேடி வரும் நாள். எடுத்த காரியங்களைச் சிறப்பாக முடிப்பீர்கள். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். ஆரோக்கியம் மேம்படும். நண்பர்களின் உதவி சரியான நேரத்தில் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் தெளிவும் துணிச்சலும் பிறக்கும். பூர்வீக சொத்து விவகாரங்களில் சாதகமான தீர்ப்பு வரும். உறவினர்களுடன் இருந்த கசப்புகள் நீங்கும். பணவரவு திருப்தி தரும்.

**கன்னி:** நிச்சயமற்ற நிலை மாறி தெளிவு பிறக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். ஆன்மீகப் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**துலாம்:** சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் கைகூடும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபம் குறையாது. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் திட்டமிடப்படும்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானம் தேவை. தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் அதிகரித்தாலும், அதற்குரிய வருமானமும் வரும். கடின உழைப்பால் இலக்குகளை அடைவீர்கள்.

**தனுசு:** ராசிநாதன் குருவின் ஆசியால் எதிலும் வெற்றி காண்பீர்கள். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சிகள் பலிதமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.

**மகரம்:** பொறுமையைக் கையாள வேண்டிய நாள். வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். கடன் சுமைகள் குறைய வாய்ப்புள்ளது. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம்.

**கும்பம்:** வருமானம் உயரும். திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்:** உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். மனதுக்கு இனிய சம்பவங்கள் நடைபெறும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும்.

# திருத்தணியில் வடமாநில இளைஞர் மீது கொலைவெறித் தாக்குதல்: தமிழ்நாட்டுக்கு தலைகுனிவு திருமாவளவன்



சென்னை ஜன.2

திருத்தணியில் வடமாநில இளைஞர் மீது 4 சிறார்கள் கஞ்சா போதையில் கொடூரமாக தாக்குதல் நடத்திய காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி பதற்றத்தை ஏற்படுத்தின. இந்த சம்பவத்துக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த சம்பவம் தமிழ்நாட்டுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின்தலைவர்திருமாவளவன் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

ஒடிசா மாநிலத்தைச் சார்ந்த புலம்பெயர் தொழிலாளர் ஒருவரைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி, வெட்டிக் காயப்படுத்திய குரூரச் செயலை 'ரீல்ஸ்' என்னும் பெயரில் காட்சிப் பதிவாகச் சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளனர். இந்த அவலம் தமிழ்நாட்டுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. இந்த அநாகரிகத்தை விசிக சார்பில் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இத்தகைய கேவலமான போக்குகளைத் தடுத்திடவும் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திடவும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென முதல்வருக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# "விஜய் இவர்களை சமாளித்தாலே அரசியலில் ஜெயிச்சிடுவாரு" எச்.வினோத் கருத்து



"சதுரங்க வேட்டை, தீரன் அதிகாரம் ஒன்று, நேர்கொண்ட பார்வை" போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர் இயக்குநர் எச்.வினோத். தற்போது இவர் விஜய்யை வைத்து 'ஜன நாயகன்' படத்தை இயக்கி உள்ளார். இப்படத்தின் எடிட்டிங் பணிகள்வரை முடிவடைந்து பொங்கல் வெளியீடாக ஜனவரி 9ம் தேதி திரைக்கு வர உள்ளது.

இதில், நாயகியாக பூஜா ஹெக்டேவும் முக்கிய கதாபாத்திரத்தில்மமிதாபைஜூவும்நடித்துள்ளனர். மேலும்பிரியாமணி, பாபி தியோல், கவுதம் மேனன், நரேன் ஆகியோர் இப்படத்தில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

தீவிர அரசியலில் களமிறங்கி இருக்கும் விஜய் நடிக்கும் கடைசி படம் இதுதான் என்று கூறப்படுகிறது. இதனால் படத்துக்கு சினிமா தாண்டி அரசியல் களத்திலும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. வழக்கமான விஜய் படம் போன்று இல்லாமல், இந்த படத்தில் அரசியல் நெடி அதிகம் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், விஜய்யின் அரசியல் வருகை குறித்து இயக்குநர் எச்.வினோத் கருத்து தெரிவித்துள்ளார். அதாவது, “முட்டாள்கள் தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு எது நல்லது, எது கெட்டது என தெரியாதவர்கள். அறிவாளிகளுக்கு நல்லது, கெட்டது தெரியும்.

அறிவாளிஅயோக்கியர்கள், எதுநல்லதுஎன்பதைவெளியில்சொல்லாமல்அதைதன்னுடையசுயநலத்துக்காக மட்டுமே பயன்படுத்துவார்கள். முட்டாள் அயோக்கியர்கள், அறிவாளி அயோக்கியர்களின் அடியாள் போல மோசமான விஷயங்களை செய்வார்கள். இந்த 4 வகை மனிதர்களை சமாளித்தாலே போதும், விஜய் அரசியலில் ஜெயிச்சிடுவார்னு நம்புறேன்.." எச்.வினோத் கருத்து தெரிவித்துள்ளார்.

# ‘‘தனியாக வாழ்வதே மகிழ்ச்சி'' பாலிவுட் நடிகர் சல்மான் கான்



பாலிவுட் சினிமாவின் முன்னணி கதாநாயகர்களில் ஒருவரான சல்மான் கானுக்கு தனி ரசிகர் பட்டாளமே உண்டு. கட்டுடல் கொண்ட கதாநாயகனாக வலம் வரும் சல்மான் கான் தற்போது ‘கல்வான்' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

சமீபத்தில் தனது 60வது பிறந்தநாளை கொண்டாடிய சல்மான்கான், இதுவரை திருமணம் செய்துகொள்ளாமல் ‘முரட்டு சிங்கிள்' ஆகவே வலம் வருகிறார். பல முன்னணி நடிகைகளுடன் காதலில் இருந்தாலும், அனைத்தும் தோல்வி கண்ட நிலையில் தற்போது தனிமரமாகவே காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கிறார்.

இதுகுறித்து நண்பர்கள் கேட்டாலும், நிகழ்ச்சிகளில் கேள்விகள் கேட்கப்பட்டாலும், ‘‘தனிமையாக ஜாலியாகவே இருக்கிறேன். பின்னர் எதற்கு தேவையற்ற விஷயங்களில் சிக்கிக்கொள்ள வேண்டும்'' என்று கூலாக பதிலளிக்கிறாராம். சல்மான் கானின் இந்த போக்கு திரையுலகை கவனிக்க வைத்துத்தான் வருகிறது.

# விஜய்யின் ஜனநாயகன் பட புது போஸ்டர் வெளியீடு




சதுரங்க வேட்டை, தீரன் அதிகாரம் ஒன்று, நேர்கொண்ட பார்வை, போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர் இயக்குநர் எச்.வினோத். தற்போது இவர் விஜய்யை வைத்து 'ஜனநாயகன்' படத்தை இயக்கி உள்ளார். இப்படத்தின் எடிட்டிங் பணிகள் வரை முடிவடைந்து பொங்கல் வெளியீடாக ஜனவரி 9ம் தேதி திரைக்கு வர உள்ளது.

இதில், நாயகியாக பூஜா ஹெக்டேவும் முக்கிய கதாபாத்திரத்தில் மமிதா பைஜூவும் நடித்துள்ளனர். தீவிர அரசியலில் களமிறங்கி இருக்கும் விஜய் நடிக்கும் கடைசி படம் இதுதான் என்று கூறப்படுகிறது. இதனால் படத்துக்கு சினிமா தாண்டி அரசியல் களத்திலும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. வழக்கமான விஜய் படம் போன்று இல்லாமல், இந்த படத்தில் அரசியல் நெடி அதிகம் இருப்பதாக கூறப்படுகிறது. மேலும் பிரியாமணி, பாபி தியோல், கவுதம் மேனன், நரேன் ஆகியோர் இப்படத்தில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

இதற்கிடையில், இப்படத்திலிருந்து "தளபதி கச்சேரி", "ஒரு பேரே வரலாறு", "செல்ல மகளே" ஆகிய 3 பாடல்கள் அடுத்தடுத்து வெளியாகி மிகுந்த வரவேற்பை பெற்றன. இந்த சூழலில் 'ஜனநாயகன்' படத்தின் இசை வெளியீட்டு விழா மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் உள்ள புக்கிட் ஜலில் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிலையில், புத்தாண்டை முன்னிட்டு 'ஜனநாயகன்' படக்குழு புதிய போஸ்டரை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக பதிவில், “நல்லா இருப்போம் நல்லா இருப்போம் எல்லாரும் நல்லா இருப்போம். இனிய புத்தாண்டு நண்பா.. நண்பி..” என்று பதிவிடப்பட்டுள்ளது. இந்த போஸ்டர் இணையத்தில் தற்போது அதிகம் வைரலாகி வருகிறது.

# டி20 கிரிக்கெட்டில் வரலாற்று சாதனை படைத்த இந்திய வீராங்கனை தீப்தி சர்மா...!



இந்தியா, இலங்கை மகளிர் அணிகளுக்கு இடையேயான 5வது டி20 கிரிக்கெட் திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்றது. இதில், இலங்கையை 15 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய மகளிர் அணி அபார வெற்றிபெற்றது.

இந்நிலையில், இந்த ஆட்டத்தில் 1 விக்கெட் வீழ்த்திய இந்திய வீராங்கனை தீப்தி சர்மா வரலாற்று சாதனை படைத்துள்ளார். அதன்படி தீப்தி சர்மா சர்வதேச டி20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீராங்கனை என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார்.

133 போட்டிகளில் ஆடிய தீப்தி சர்மா 152 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் 151 விக்கெட்டுகளை வீழ்த்தி பட்டியலில் முதல் இடத்தில் இருந்த ஆஸ்திரேலிய வீராங்கனை மெஹன் ஷட்டை பின்னுக்குத்தள்ளி தீப்தி சர்மா முதல் இடம் பிடித்துள்ளார்.

# கோமாவில் இருந்த கிரிக்கெட் வீரர்...8 ஆண்டுகளுக்கு பின் உயிரிழப்பு



இலங்கையின் முன்னாள் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் வீரர் அக்ஷு பெர்னாண்டோ(*Akshu Fernando*) (வயது 25) வலது கை துடுப்பாட்டக்காரரான பெர்னாண்டோ, 2008 ஆம் ஆண்டில் பாணந்துறை அணிக்காக 23 வயதுக்குட்பட்டோர் போட்டியில் விளையாடியதன் மூலம் கிரிக்கெட்டில் அறிமுகமானார். மேலும், கோல்ட்ஸ் கிரிக்கெட் கிளப், பாணந்துறை விளையாட்டுக் கழகம் மற்றும் சிலாவ் மேரியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகளுக்காகவும் விளையாடியுள்ளார்.

கடந்த 2018 டிசம்பர் 28 அன்று, மவுண்ட் லவ்னியாவில் கடற்கரையில் பயிற்சி அமர்வின் போது, ரெயில் தண்டவாளத்தைக் கடக்கும்போது ரெயிலில் அடிபட்டு விபத்தை சந்தித்தார். தலையில் பலத்த காயம் மற்றும் எலும்பு முறிவுகளுடன் அவர் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் கோமாவிற்கு சென்றதாக கூறப்பட்டது.

அப்போது முதல், உயிர் காக்கும் கருவியின் உதவியுடன் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். விபத்திற்கு முன்னர், இலங்கையின் மிகவும் நம்பிக்கைக்குரிய இளம் கிரிக்கெட் வீரர்களில் ஒருவராகக் கருதப்பட்டார். அவரின் மறைவிற்கு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# டி20 உலகக்கோப்பை: ஆப்கானிஸ்தான் அணி அறிவிப்பு



10வது டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் வரும் பிப்ரவரி 7ம் தேதி தொடங்கி மார்ச் 8ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற உள்ளது. டி20 உலகக் கோப்பை தொடரில் 20 அணிகள் பங்கேற்க உள்ளன. இதற்கான அணி வீரர்களை அந்தந்த நாடுகள் அறிவித்து வருகின்றன.

இந்நிலையில், டி20 உலகக்கோப்பை தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் அணியின் கேப்டனாக ரஷீத் கான் அறிவிக்கப்பட்டுள்ளார்.

டி20 உலகக்கோப்பை தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி வீரர்கள் விவரம்:

ரஷீத் கான் (கேப்டன்), நூர் அகமது, அப்துல்லா அகமதி, சித்திக்குல்லா அதல், பெசல்க்யு பரூக்கி, ரஹமதுல்லா குர்பாஸ், நவீன் உல் ஹக், முகமது இஷாக், ஷாகிதுல்லா கமல், முகமது நபி, குல்புதீன் நபி, அகமதுல்லா ஓமர்சாய், முஜிப் உர் ரஹ்மான், டார்விஸ் ரசோலி, இப்ராகிம்

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066